Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

THE EELANADU
Nationa Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389
தேசிய தினசரி
மலர் 13
இதழ் 100

யாழ்ப்பாணம் வைகாசி 9 றபீயுல் 27 ஞாயிற்றுக்கிழமை (23-5-71)

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்



டொலர் கோர்ப்பரேஷன்
கொழும்பு

# 'நாட்டின் ஜனநாயகத்தை பிரதமர் காப்பாற்றினர்'

## எதிர்க்கட்சித் தலைவர் ஜே. ஆர். பாராட்டு

கொழும்பு, சனி

பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ இலங்கையின் ஜனநாயகத்தைக் காப்பாற்றி விட்டார் என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இன்று ஆட்சிமன்றத்தில் பாராட்டுத் தெரிவித்தார்.

ராணுவத்தினர் அத்துமீறிய செயல்களில் ஈடுபடுவதாகவும், போர் பற்றிய சட்டங்களை அவர்கள் கடைப்பிடிக்க வேண்டுமென முன்னர் ஒருதடவை தெரிவித்தேன். இதனை அப்போது அரசாங்கம் மறுத்தது. ஆனால் நேற்றுக் கூடிய அரசாங்க கட்சிக்குழுக் கூட்டத்தில் ராணுவத்தினரின் அத்துமீறிய செயல்களை ஆராய மந்திரி சபை உபகுழு வொன்று நியமிக்கவேண்டுமென தீர்மானித்துள்ளது.

உண்மை என்ன என்பது இப்போது தெரிகிறதல்லவா என்றும் ஜே. ஆர். கூறினர்.

நாட்டுக்கு ஏற்பட்ட கஷ்டமான நிலைமையை பிரதமர் தனியாக நின்று தக்க சமயத்தில் சமாளித்தமைக்கும் பாராட்டுத் தெரிவித்தார்.

உள்ளூர் அதிகாரசபைகள் விஷேச சட்டமூலம் சட்டங்கள் பற்றிய மசோதாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பிரதமருக்கு இப்பாராட்டை எதிர்க்கட்சித்தலைவர் தெரிவித்தார்.

திரு ஜே ஆர். ஜெயவர்த்தன மேலும் பேசுகையில் நாட்டில் ஏற்பட்ட கஷ்டமான நிலைமையை சமாளித்ததற்காக அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன். பொலிசாரும் ஆயுதப்படைகளும் தங்களது கடமைகளை சிறப்பாகச் செய்தமைக்குப் பாராட்ட வேண்டும். வன்முறைகளை அடக்குவதற்கு அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு எதிர்க்கட்சி தனது முழு ஆதரவையும் கொடுக்கும். இந்த ஆதரவு எதற்காகக் கொடுக்கப்படுகிறதென்றால், மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஓர் அரசாங்கத்தை வன்முறை மூலம் வீழ்த்துவதற்கு அனுமதிக்கக் கூடாதென்ற எமது எண்ணமேயாகும். இன்றைய நிலைமையை நாம்

6-ம் பக்கம் பார்க்க

### கள்ளுக் கொட்டில்களை

## மாலை 6 மணிக்கு மூடும்படி பொலிஸார் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஞாயிறு கள்ளுக் கொட்டில்களை மாலை 6 மணிக்கு முன்னர் மூடிவிடும்படி, பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கள்ளுக் கொட்டில்களை இரவு 7-30 மணிவரை திறந்துவைப்பதால் அதன் பின் அங்கிருந்து செல்பவர்கள் பல கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கிறதென்றும், ஆதலால் கள்ளுக் கொட்டில்களை நேரத்துடன் மூடிவிட வேண்டும் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகத்திற்கிடமான நபர்கள் எவரும் நடமாடினால் அல்லது, புதியவர்கள் எவரும் நடமாடினால் உடனடியாகப் பொலிஸாருக்கு அறிவிக்கும்படியும் கேட்கப்பட்டுள்ளது.

பொலிஸ் நிலையத்திற்கு நேரிற்செல்ல முடியாதவர்கள், தவல்களை டெலிபோன் மூலம் அறிவிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

# சீமெந்துக்கு விலைக்கட்டுப்பாடு

கோட்டை, சனி

சீமெந்துவிலைக்கட்டுப்பாட்டுகள் கொண்டுவரப்பட்டுள்ளது. நாட்டின் சிலபகுதிகளில் கறுப்புச் சந்தைக்காரர்களும் தனியார்களும் சீமெந்தை அதிக விலைக்கு விற்பதனாலேயே இக்கட்டுப்பாடு கொண்டுவரப்பட்டுள்ளதென அறியப்படுகிறது.

கொழும்பு மாவட்டத்தில் 110 ருத்தலுடைய ஒரு பைக்கற் சீமெந்தின் ஆகக் கூடிய விலை ரூபா 13-50சதமாகும். மற்றமாவட்டங்களில் விலைகளிற்சிறிதுமாறுபாடு இருக்கலாம். ஆனால் நாட்டின் எந்தப்பகுதியிலாயினும் 13- ரூபா 75 சதத்திற்குமேல் விற்பனை செய்யக் கூடாது. அப்படியாராவது விற்பனை செய்தால் அவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்களென கைத்தொழிலமைச்சு அறிவித்துள்ளது.

வர்த்தகத்துறைக்கு போதிய சீமெந்து விநியோகம் செய்யப்பட்டிருப்பதாக சீமெந்து கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

# வெங்காய இறக்குமதி நிறுத்தப்படும்

## மந்திரிசபை முடிவுசெய்துள்ளது

கோட்டை, சனி

பம்பாய் வெங்காயஇறக்குமதியை உடனடியாக நிறுத்துவதென மந்திரிசபைமுடிவு செய்துள்ளது. இந்தியா ஒரு தொன் ரூபா 350 விலைக்குள் சின்னவெங்காயம் தரச் சம்மதித்தால் மட்டுமே சின்ன வெங்காயத்தை இறக்குமதி செய்வதென மந்திரி சபை முடிவு செய்தது அப்படி இந்தியா சம்மதிக்காவிட்டால் உள்ளூரில்விளைவிக்கும் வெங்காயத்தைக் கொண்டே நாட்டின் தேவையைச் சமாளிக்க வேண்டுமென்றும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதற்கு அந்நியச் செலாவணிக்குறைவே காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு வெங்காயத்தை ஏற்றுமதி செய்யும் [illegible] மதியாளர் சம்மேளனம் பொறுப்பேற்றதன்பின்விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் ஒருதொன் சின்னவெங்காயத்திற்கு 750 லிருந்து 800ரூபாவரை அவர்கள் கேட்பதாகவும் இவ் விலை தனியார்மூலம் இறக்குமதி செய்யப்பட்ட பொழுதைய நிலையிலிருந்ததைவிடமூன்று மடங்கு அதிகமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி இலங்கை அரசாங்கம் இந்திய அரசுக்கு ஆட்சேபனை தெரிவித்துள்ளது, இலங்கையில் விற்பனவு செய்யப்படும் பொருட்களுக்கு வெளியார் விலை நிர்ணயிப்பதை அனுமதிக்க முடியாதென. அவ்வாட்சேபனைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடபகுதியில் சின்னவெங்காயம் பெருமளவில் இருப்பதாகவும் அவ் வெங்காயத்தை நாட்டின் பிற பகுதிகளுக்குக் கொண்டு செல்வதற்கு ஏற்ற முறையில் ஆணையிறவில் இருக்கும் தடையை அகற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று செனட்டில் அண்மையில் செனட்டர் சு. நடராசா அரசாங்கத்தைக் கேட்டிருந்தது குறிப்பிடத் தக்கது.

---

## 2500துப்பாக்கிகள் கையளிக்கப்பட்டன

கோட்டை, சனி

யாழ்ப்பாணத்தில் 2500 துப்பாக்கிகள் பொதுமக்களால் பாதுகாப்புப் படையினரிடம் கையளிக்கப்பட்டுள்ளன, கடற்படையினரின் கப்பல்மூலம் இத் துப்பாக்கிகள் திருகோணமலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத்தெரிகிறது.

# கொழும்பில் ஆயுள்வேத மருந்து விற்பனவு நிலையம்

கோட்டை, சனி

ஆயுள்வேத மருந்துக் கூட்டுத்தாபனம் தனது மொத்த சில்லறை வியாபார நிலையத்தை கொழும்பில் திறந்துள்ளது. இந்த நிலையத்தில் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட ஆயுள்வேத மருந்துவகைகளும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆயுள்வேத மருந்துவகைகளும் இங்கு விற்பனவு செய்யப்படும்.

அரசாங்கத்தின் இறக்குமதிக் கோட்டாவில் 50 சதவீதமான பகுதி இக் கூட்டுத்தாபனத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. இவ் விற்பனவு நிலையம் ஆட்டுப்பட்டித் தெருவிலுள்ள 240-வது இலக்க இடத்தில் திறக்கப்பட்டுள்ளது, ஆயுர்வேத சங்கங்கள் ஆயுர்வேத வைத்தியர் சங்கங்களுக்கு இக் கூட்டுத்தாபனம் மருந்துகளைக் கொடுக்கும். பதிவு செய்யப்பட்ட ஆயுள்வேத வைத்தியருக்கே சில்லறை வியாபாரம் செய்யப்படும்.

## ஊரடங்கு நேரம்

இன்று மாலை 7-30 முதல் நாளை காலை [illegible] வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

சோப் தயாரிப்பதில் அனுபவம் உள்ள ஆள் தேவை. தபால் மூலம் விண்ணப்பிக்கவும். விலாசம்: வெ. சுந்தரம், வியாபாரி மூலை, பருத்தித்துறை.
3121

யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. ஸ்தாபனத்திற்கு கிறிஸ்தவ, இளைஞர் பணி செயலாளர் தேவை. 25 — 35 வயதுக்கு இடைப்பட்ட பட்டதாரி விரும்பப்படுவர். வேதனம் தகைமைகளுக்கேற்ப நிர்ணயிக்கப்படும். விண்ணப்ப முடிவு திகதி 27-5-71 3127

### உபநயனப்ர்மோமதேச விஞ்ஞாபனம்

நிகழும் வைகாசி மீ 12ந் தேதி (26-5-71) 9-28 தொடக்கம் 11-28 வரையுள்ள கடக லக்கினத்தில் எமது கனிஷ்ட புத்திரன் சிரஞ்சீவி சண்முகராஜசர்மாவுக்கு உபநயனஞ்செய்ய இருப்பதால் உற்றார் உறவினர் யாவரும் வந்து ஷெ குழந்தையை ஆசீர்வதிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம். இங்ஙனம் சிவஸ்ரீ வை. மு. பரமசாமிக்குருக்களும் பாரியாரும், கோப்பாய் மடைக்கு. 3126

### விற்பனைக்கு

யாழ்ப்பாண நகரசபை எல்லைக்குள் பரப்பு 5 உட்பட கடை ஒன்று மண் வீடு, பிரயோசனம் மா, பலா, தென்னை, கிணறு, மலசலகூடம், மின்சார தண்ணீர் பைப் வசதியுடன் (4-ம் வட்டாரம்) விற்பனைக்குண்டு. விபரம்: V. S. குமாரசாமி, 28, புதிய வீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்
3128

RAJAH JAFFNA
Daily: 10-30a.m. 1-30&4-00p.m.
Anthony Quinn and Tonny Bill
in
THE LAST WARRIOR
(Scope&Color)

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி காலை10-00 பி.ப;2-00
ஜெமினி கணேசனும் கே. ஆர். விஜயா நடித்த
ராமன் எத்தனை ராமனடி

நாகம்ஸ்சினிமா
சுன்னாகம்
Daily 10-30 A. M. only
CHINESE ADVENTURE in CHINA
2-30 மட்டும்
பூவா தலையா

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி
காலை 10 30. பி. ப 2-30
ஜெய்சங்கர் — வாணிஸ்ரீ
நடித்த
நேர் வழி

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி
காலை 10-30, பி ப 1-30
சிவாஜிகணேசன்-K. R. விஜயா
நாகேஷ்
நடித்த
திருடன்

மனோகரா
(யாழ்ப்பாணம்)
Daily 10-30 a.m
Christopher George
in
PROJECT X
(Techni-Color)
தினசரி பி ப. 2-00
ஜெய்சங்கர்-கே ஆர். விஜயா
நடித்த
பெண்ணை வாழவிடுங்கள்

REGAL (Jaffna)
Daily 10-30 a m 2 & 4-15 p. m.
Jerry Lewis
as
THE BIG MOUTH
(Color)

வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-30, பி. ப, 200 மணி
★ ரவிச்சந்திரன்
★ ஜெயலலிதா
★ மனோரமா
★ ரங்காராவ்
நடித்த
குமரிப் பெண்

கெப்பிட்டல்
காலை 10, பி.ப.2-00 மணி
கை கொடுத்த தெய்வம்

ஸ்ரீதர்
காலை 10, பி.ப.2-00 மணி
அன்பே வா

மைலன்
காலை 10, பி.ப.2-00 மணி
நேர் வழி

பிளாஸா
காலை 10, பி.ப.2-00 மணி
பாலும் பழமும்

அடுத்த வெளியீடு
மூன்றெழுத்து
(மர்மச் சித்திரம்)

### சங்கானைப் பட்டினசபை கேள்வி விளம்பரம்

1971-ம் ஆண்டு ஜூன் மாதம் 7-ந் திகதி (7-6-71) காலை 10 மணி வரை மேற்படி பட்டினசபைத் தலைவரால் கீழே குறிப்பிடும் வேலைக்கு ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்விகள் அழைக்கப்படுகின்றன. கீழ்க் குறிப்பிடும் கேள்விப் பிணைப்பணமும் கேள்விப் பத்திரப்பணமும் செலுத்தியதன் பேரில் வழங்கப்படும் பத்திரங்களில் மட்டுமே கேள்விகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் 6-6-71 நண்பகல் 12 மணி வரையும் வழங்கப்படும்.

ஏனைய விபரங்களை சங்கானைப் பட்டினசபை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

#### வேலை விபரம்

ஓடைக்கரை வீதி அரசாங்க நன்கொடை திருத்த வேலை.

கேள்விப் பிணைப்பணம் ரூபா 100/-

கேள்விப் பத்திரப்பணம் ரூபா 5/-

சி. வயிரமுத்து,
தலைவர்,
பட்டினசபை,
சங்கானை.

பட்டினசபை அலுவலகம்,
சங்கானை,
21-5-1971. 2801

### நிதிவழங்க தீர்மானம்

உடுப்பிட்டி, சனி

தன்னாலை கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கம் பயங்கரவாதிகளினால் பாதிக்கப்பட்ட பாதுகாப்புப்படையினரின் குடும்பங்களுக்கு உதவும் முகமாக நாடகமொன்றை நடாத்தி அதிலிருந்து கிடைக்கும் வசூலை நிதியாக வழங்கத் தீர்மானித்துள்ளது ......

உடுப்பிட்டி, சனி

தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு பயங்கரவாதிகளிடமிருந்து பிரதமர் ஜனநாயகத்தைக் காப்பாற்றியதைப் பாராட்டி உடுப்பிட்டித் தொகுதிக் கம்யூனிஸ்ட் வாலிபர் சங்க அமைப்பாளர் திரு. பா. தவயோகம் பிரதமர் திருமதி சிறிமாவுக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் கேள்வி அறிவித்தல்

#### கழிவு/எரிந்த செப்புக் கம்பிகள் முதலியன விற்பனை

கழிவு/எரிந்த செப்பு/ நாகம் பூசிய இரும்புக் கம்பிகள் மற்றும் மின்சார மோட்டார்கள், மின் மாற்றிகள் ஆகியவைற்றின் கொள்வனவிற்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "செப்புக் கம்பிகள் மற்றும் மின்சார மோட்டார்கள் ஆகியவற்றிற்கான கேள்விகள்" எனக் குறிக்கப்பெற்று அரக்கு முத்திரையிடப்பட்ட உறையில் கேள்விகள், யாழ்ப்பாணம், மாநகர ஆணையாளருக்கு முகவரியிடப்படல் வேண்டும்.

கேள்விப் படிவங்கள் பெறுவதற்கான இறுதித் தினம் 4-6-71 ஆகும். 10-6-71 நண்பகல் 12-00 மணிக்குப் பின் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

மேற்கொண்டு வேண்டப்படும் தகவல்களை இதன் கீழ் கைச்சாத்திட்டிருப்பவரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ஏ. ரி. சுந்தரம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற
அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
21-5-71. 2802

### அப்பீல் ஒத்திவைப்பு

கோட்டை, சனி

யாழ்ப்பாணம் தேர்தல் ஆட்சேபமனு தீர்ப்பை எதிர்த்து தாக்கல்செய்யப்பட்ட அப்பீல் விசாரணை காலவரையின்றி ஒத்திபோடப்பட்டுள்ளது. நுவரேலியா தேர்தல் வழக்கு அப்பீல் விசாரணையும் காலவரையின்றி ஒத்திபோடப்பட்டுள்ளது.

### உத்தியோகப்பற்றற்ற மேற்பார்வையாளர்

காவிட்டபுரம், சனி

காங்கேசன்துறை ஆஸ்பத்திரி உத்தியோகப்பற்றற்ற மேற்பார்வையாளராக திரு. இ. பசுபதி நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் கொழும்புக்கிளை உறுப்பினரும், தெல்லிப்பழை வாலிபர் ஐக்கிய சனசமூகநிலையத் தலைவருமாவர்.

### ஆலயங்களின் விபரங்கள் திரட்டப்படுகின்றன

மாவிட்டபுரம், சனி

இந்து ஆலயம், தேவாலயங்களின் விபரங்கள், ஆலய சொத்து, நிர்வாக விபரம் முதலியவற்றை காரியாதிகாரிகள் மூலம் கலாச்சார அமைச்சு திரட்டுகிறது.

கலாச்சார அமைச்சின் உத்தரவின்பேரில் காரியாதிகாரிகள் அவ்வப்பகுதி கிராமசேவையாளர்கள் மூலம் இந்து ஆலயங்கள், தேவாலயங்கள் ஆகியவற்றின் விபரங்களைக் கோரியுள்ளனர். ஆலய உற்சவம் நிகழும் காலம், ஆலயத்தில் நிகழும் விசேடவிழாக்கள் ஆலயங்களின் முகாமையாளர்களின் பெயர்கள், ஆலயத்துக்குள்ள காணிகள் உட்பட மற்றும் பல விபரங்கள் சேரிக்கப்படுகின்றன.

### இளைஞர் கல்வி நிலையம்

யாழ்ப்பாணம், பெரிய வீதி 110 இலக்க இல்லத்தில் பொதுத்தராதர (சாதாரண) பரீட்சைக்கு மாணவர்களுக்குப் போதனை அளிக்கும் "இளைஞர் கல்வி நிலையம்" இவ்வருட 2-ம் தவணைக்கு ஆனி மாதம் 2-ம் திகதி தொடங்கும். கல்வி பயில விரும்புவோர் அத்தினம் 9 மணிக்கு நிலையத்தில் பெயர்களைப் பதிவு செய்துகொள்ளலாம்,

அதிபர் சுவாமியார்
த பெ, 2,
யாழ்ப்பாணம்.

2803

இப்பொழுது திரையிடப்படுகிறது!
வின்ஸர்-யாழ்ப்பாணம்
காலை 10-30 பி. ப, 2-00
சிவாஜி கணேசன், ★ பத்மினி, ★ ஜெயலலிதா
★ நம்பியார் ★ சுந்தரராஜன் ★ தங்கவேலு ★ மனோரமா
நடித்த
குருதட்சணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதிகளைத் திரும்பி வருமபடி அழைக்கிருர் யாஹ்யாக்கான்

## பொய்ப்பிரசாரம் செய்ததாக இந்தியாமீது குற்றச்சாட்டு

கராச்சி, மே 22

இந்தியாவுக்குக் குடி பெயர்ந்து சென்றுள்ள அனைவரையும் கிழக்குப் பாகிஸ்தானுக்குத் திரும்பிவிடும்படி பாகிஸ்தான் அதிபர் யாஹ்யாக்கான் வேண்டுகோள் விடுத்திருக்கிருர்.

கிழக்குப் பாகிஸ்தானில் இப்போது அமைதி நிலை நாட்டப்பட்டுவிட்டதாகவும் மாமூல் நிலைமை திரும்பிக்கொண்டிருப்பதாகவும் யாஹ்யாக்கான் தெரிவித்திருக்கிருர்.

அகதிகள் விஷயத்தை இந்திய அரசாங்கம் மிகைப்படுத்திக் கூறிவருவதாக ஜெனரல் யாஹ்யாக்கான் குற்றஞ் சாட்டியிருக்கிருர். இந்தப் பிரச்னையை மனிதாபிமானத்துடன் நோக்குவதை விடுத்து அரசியல் கண்ணோட்டத்துடன் இந்தியா பயன்படுத்தி வருவதாக அவர் கூறியிருக்கிருர்.

### ஐ. நா. வில் அகதிகள் பிரச்னை

ஐ. நா. பொருளாதார சமூகவியல் சபையில் பாகிஸ்தான் அகதிகள் பற்றிய அறிக்கையொன்றை இந்திய நிரந்தரப் பிரதிநிதி திரு சமர்சென் சமர்ப்பித்தார். இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதைத் தடுப்பதற்கு பாகிஸ்தான் பிரதிநிதி ஒரு ஆகாசாதி முயற்சி செய்தார் என்றும் ஆனல் அது பலனளிக்கவில்லையென்றும் இந்திய வட்டாரங்கள் தெரிவித்தன. பாகிஸ்தான் பிரதிநிதியின் ஆட்சேபனைகளை சபைத்தலைவர் நிராகரித்துவிட்டதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து குடிபெயர்ந்து வந்துள்ள அகதிகளுக்காக பெருமளவில் உதவிகள் தேவைப்படுவதாகவும் கிழக்குப் பாகிஸ்தானுக்கு இவர்கள் திரும்பிச்செல்வதற்கான சூழ்நிலை உருவாக்கப்படவேண்டும் என்றும் திரு சமர்சென் தமது அறிக்கையில் தெரிவித்திருக்கிருர். இந்தியாவுக்குள் பெண்கள் குழந்தைகள் உட்பட ஏராளமான கிழக்குப் பாகிஸ்தானியர்கள் அகதிகளாக வந்துள்ளனர் என்றும் கிழக்குப் பாகிஸ்தானியர் பலர் கொலையுண்டிருப்பதாகவும் பாகிஸ்தான் பிரதிநிதி சபையில் ஒருகட்டத்தில் ஒப்புக்கொண்டதாகவும் செய்திகள் கூறின.

## எவரெஸ்ட்மலை ஏறும் கோஷ்டி திரும்புகிறது

புதுடில்லி, மே 21

எவரெஸ்ட் சிகரத்தைஎட்டிப்பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த குழுவினர், தமது முயற்சியைக்கைவிட்டுவிட்டதாக அறிவித்துள்ளனர்.

கம்பியில்லாத் தந்திமூலம் அடிவார முகாமுக்கு நேற்று இந்தச்செய்தி அறிவிக்கப்பட்டது பிராணவாயு பற்றாக்குறை உணவுபற்றாக்குறைபோன்ற பலகுறைகள் ஏற்பட்டுள்ளதாக கடைசி முகாமிலிருந்து அந்தக்குழு கூறியுள்ளது.

பிரிட்டன், ஜப்பான் நாட்டைச் சேர்ந்த 4 பேர் இந்தக் குழுவில் அங்கம்வகித்தனர். இவர்கள் இதுவரை எவரும் ஏருத தென்மேற்குப் பாகத்தில் ஏற நேற்று எடுத்த முயற்சி பலிக்கவில்லை

சிகர உச்சியைஏறுவதற்கு எடுக்கப்பட்ட 15-வது முயற்சி இதுவாகும், முன்னைய 14 முயற்சிகளிலும் 5மட்டுமே வெற்றியளித்தது. இதுவரை 24பேர் சிகரத்தை அடைந்துள்ளனர்.

## களுத்துறை நகரசபை கலைக்கப்பட்டது

களுத்துறை, சனி

களுத்துறை நகரசபை கலைக்கப்பட்டுள்ளது இதன் நிர்வாகம் இப்பொழுது இப்பகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதுவரை 18 உள்ளூராட்சி மன்றங்கள் கலைக்கப்பட்டுள்ளன.

## 5 வருட அனுபவம் தேவையில்லையாம்

யாழ்ப்பாணம் ஞாயிறு

டி. ஐ. எம். எஸ்., டி. ஏ. எம். எஸ். பட்டதாரிகளிடம் இதுவரைகாலமாக உள்ளூர் ஆட்சிச் சேவையில் சேர்வதற்குக் கேட்கப்பட்டு வந்த 5 வருட வைத்திய அனுபவம் இனி வருங்காலத்தில் தேவையில்லையென உள்ளூராட்சி ஆணையாளர் தீர்மானித்துள்ளார்.

இப் பட்டதாரிகளுக்கு 5 வருட அனுபவம் கேட்பது சரியல்லவென்றும் இவ் நிபந்தனையை நீக்க வேண்டுமென்றும் இப்பட்டதாரிகள் ஆஸ்பத்திரிகளில் ஒரு வருட சாதனை பயிற்சி பெற்றிருப்பதால் 5 வருட அனுபவம் தேவையில்லையென்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த டாக்டர் க. மருதயனர் கோரியிருந்தார். ஆயுர்வேத ஆணையாளர் திரு விமல் நவகமுவவும் மருதயனரின் இக் கோரிக்கையை ... ஏற்றுக்கொண்டார்.

## "டேபிள் டென்னிஸ் ராஜதந்திரம்"

சீன—அமெரிக்க

மாஸ்கோ, மே 22

"அமெரிக்க, சீன விளையாட்டு நிபுணர் சந்திப்பதோ, அமெரிக்க - சீன உறவுகள் சகஜ நிலை அடைய வேண்டும் என்ற விருப்பு வாதோ மோசமான காரியம் அல்ல. ஆனல் இந்தச் சிறிய விஷயத்தை வைத்துக்கொண்டு அமெரிக்கப் பத்திரிகைகள் சோவியத் எதிர்ப்பு கம்யூனிஸ்ட் எதிர்ப்புக் கூச்சல் போடுவது மோசமான காரியமாகும். தனது நடவடிக்கைகளுக்கு சோவியத் எதிர்ப்பு பின்னணி உண்டு என்பதை அமெரிக்க அரசு மறுத்த போதிலும் பீகிங்குடன் குலாவுவதற்கு சோவியத் எதிர்ப்பு நோக்கங்கள் உண்டு என்பதை அமெரிக்க ஏடுகள் தெளிவாக நிரூபிக்கின்றன."

அமெரிக்க டேபிள் டென்னிஸ் குழுவின் பீகிங் விஜயம் பற்றி "மாஸ்கோ நியூஸ்" சஞ்சிகையில் டானில் கிராமினேவ் இப்படி எழுதுகிருர்.

இன்றைய அமெரிக்க அரசாங்கம் தனது தீவிர கம்யூனிஸ்ட் எதிர்ப்புக் கொள்கைக்கு இணங்க சோஷலிச முகாமின் நிலைகளைப் பலவீனப்படுத்தவும், சோஷலிச நாடுகளை ஒன்றுக்கொன்று மோத விடவும் குறிப்பாக சோவியத் யூனியனுக்கு எதிராக மோதவிடவும் நெடுங்காலமாக முயன்று வருகிறது சோவியத் யூனியனைத் தனது பிரதான எதிரியாக அமெரிக்க ஏகாதிபத்தியம் கருதுகிறது. ஆனல் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இந்த முயற்சிகள் பலிக்கவில்லை எனினும் அமெரிக்கப் பிரசாரத்திற்கு இவை தீனி போடுகின்றன.

இந்தோ-சீனவில் ஒரு மோசமான யுத்தத்தை நடத்திக்கொண்டிருக்கும் அமெரிக்கா அந்த யுத்தச் சேற்றில் மேன்மேலும் புதைந்து வருகிறது. டேபிள் டென்னிஸ் ராஜதந்திரத்தின் மூலம் அந்தச் சேற்றிலிருந்து அது மீள முடியாது என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## விண்வெளியில் வியப்பைத் தரும் 'மின்சக்தி நிலையங்கள்'

லண்டன், மே 22

எல்லையற்றதான ஆகாயப் பரப்பில் சிதறிக்கிடக்கும் நட்சத்திர மண்டலங்களும் அவற்றிலுள்ள கோடிக்கணக்கான விண்மீன்களும் நூற்றுண்டுகாலமாய் வான சாஸ்திரிகளுக்கு வியப்பை அளித்து வந்தன. இந்த நட்சத்திர மண்டலங்களில் இன்று மிகப்புதிரானதாகக் கருதப்படுவது 'எதிரொலிப் பால் மண்டலம்' என்பதாகும் இம்மண்டலத்திலுள்ள கோடிக்கணக்கான நட்சத்திரங்கள் மிகப் பிரகாசமான கதிரொளிகளை வெளிவீசுவதுடன் சக்தி வாய்ந்த வானெலிச் சமிக்ஞைகளையும் வெளி விடுகின்றன. ஒளியாகவும் ஒலியலைகளாகவும் இந்த நட்சத்திரமண்டலத்திலிருந்து புறப்படும் மாபெரும் சக்தி விண்வெளி விஞ்ஞானிகளுக்குத் திகைப்பை அளித்துள்ளது. இந்த நட்சத்திர மண்டலத்திற்கு இவ்வகையான பிரமாத சக்தி எவ்விதம் ஏற்படுகிறது என்பது இவர்களுக்கும் நீண்டகாலமாய் ஒரு புதிராகவே இருந்தது:

### பழைய கோட்பாடு

இந்த நட்சத்திரமண்டலத்திலுள்ள நட்சத்திரங்கள் காந்த சக்திக்கு உட்பட்டவை என்றும் மின்விசையூட்டப்பட்ட இதன் அணுத்துகள்கள் அதிவேகமாகச் சுழல்வதால் சக்திவாய்ந்த வானெலிச் சமிக்ஞைகள் இவற்றிலிருந்து புறப்படுவதாகவும் பழைய கோட்பாடு ஒன்று கூறுகிறது. இந்தக் கோட்பாட்டில் பல தவறுகள் இருப்பதாக இன்றைய விண்வெளி விஞ்ஞானிகள் கூறுகின்றனர். முதலாவது காந்தவிசை மூலம் இத்தகைய மாபெரும் சக்தி ஏற்படுவது சாத்தியமில்லை. இரண்டாவது அணுத்துகள்கள் எப்படி மின்விசையூட்டப்பட்டன என்பதற்கு இந்தக் கோட்பாடு எவ்வித விளக்கத்தையும் கொடுக்கவில்லை. இக் கோட்பாட்டில் மற்ருெரு குறை என்னவென்ருல் இக்கதிரொளிப் பால் மண்டலத்தின் அமைப்பை இது விளக்குவதாக இல்லை.

### புதிய கண்டுபிடிப்பு

கேம்பிரிஜ் சர்வகலாசாலையைச் சேர்ந்த பிரபல விண்வெளி விஞ்ஞானியாகிய டாக்டர் எம். ஜே. ரீஸ் இந்நட்சத்திர மண்டலம் சம்பந்தமாக புதிய கண்டுபிடிப்புகளை நிகழ்த்தியுள்ளார். இம்மண்டலம் கன அடர்த்தி நிறைந்த குறுகிய நட்சத்திரங்களைக்கொண்டிருப்பதாகவும் தமது சொந்த ஈர்ப்புச்சக்தியால் இவை குறுகிவருவதாகவும் டாக்டர் ரீஸ் கண்டுபிடித்துள்ளார். பிரமாண்டமான நட்சத்திரங்கள் இப்படிக் குறுகும்போது அவற்றிலுள்ள ஜடம் தூய சக்தியாக உருமாறுகிறதென்றும் இந்த சக்தி பிரகாசமான ஒளியாகவும் வானெலிச் சமிக்ஞைகளாகவும் வெளியேறுவதாகவும் இவர் கூறுகிருர்.

டாக்டர் ரீஸின் இந்தப் புதிய கண்டுபிடிப்பு இந்நட்சத்திர மண்டலத்தில் மண்டலத்தில் பல புதிர்களுக்கு விடையளிப்பதாக வான சாஸ்திரிகள் பலர் ஒருமுகமாக ஒப்புக்கொண்டுள்ளனர். வான மண்டலத்தில் மின்சக்தி நிலையங்கள்போல் பிரகாசமளித்து அபார சக்தியைப் பரப்பும் இந்த நட்சத்திரங்களை மனிதன் தன் தேவைகளுக்குப் பயன்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஆயுதக்குறைப்பு ஒப்பந்தம் இந்த ஆண்டில் சாத்தியம்

### அதிபர் நிக்ஸன் நம்பிக்கை

வாஷிங்டன், மே 22

சக்திவாய்ந்த போர்க் கருவிகளைக் குறைத்துக் கொள்வதற்கான ஒப்பந்தம் ஒன்றை அமெரிக்காவும் சோவியத் யூனியனும் இந்த ஆண்டுக்குள்செய்துகொள்ள வாய்ப்பிருப்பதாக அமெரிக்க அதிபர் நிக்ஸன் தெரிவித்திருக்கிருர்.

தற்காப்புக்குப் பயன்படுத்தவும் எதிரிகள்மேல் தாக்குதல் நடத்தவும் பயன்படுத்துவதற்கான ஏவுகணைகள் போன்ற முக்கிய ஆயுதங்களைக் குறைப்பதற்கென இருநாடுகளுக்கு மிடையில் ஒப்பந்தம் ஒன்று உருவாகும் என்று திரு. நிக்ஸன் நம்பிக்கை தெரிவித்திருக்கிருர்.

ஆயுதக் குறைப்பு சம்பந்தமான கூட்டுத் தீர்மான மொன்று ஏககாலத்தில் மாஸ்கோவிலும் வாஷிங்டனிலும் வெளியானதை யொட்டி திரு நிக்ஸன் உரை நிகழ்த்தினர். இருநாடுகளுக்குமிடையில் ஆயுதக்குறைப்பு சம்பந்தமான ஒப்பந்தம் ஒன்று ஏற்படாதவரையில் அமெரிக்கா ஒருதலைப்பட்சமாக ஆயுதக்குறைப்பு எதையும் மேற்கொள்ள மாட்டாது என்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் திரு லேயார்ட் கூறியிருக்கிருர்.

### இ. பாக்கில் சகல இளைஞர்களையும்

## இராணுவ முகாமுக்கு செல்லுமாறு உத்தரவு

புதுடில்லி, மே 21

கிழக்குப் பாகிஸ்தானிலுள்ள சகல இளைஞர்களையும் அண்மையிலுள்ள இராணுவ முகாமில் பிரசன்னமாகுமாறு பாகிஸ்தான் இராணுவம் உத்தரவு பிறப்பித்துள்ளதாக இந்திய வானெலி நேற்றுக் கூறியது.

கொமில்லா நகரிலுள்ள தனியாருக்குச் சொந்தமான விசைப் படகுகளையும் ஒருவார காலத்துக்குள் இராணுவத்திடம் கையளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளதாகவும் அச்செய்தி தெரிவித்தது.

### உலகின் உயர்ந்தபெண் மரணம்

ஹூஸ்டன், மே. 22

உலகின் அதி உயரமான பெண்மணி எனக் கூறப்பட்ட திருமதி டொலறஸ் புலாட் ஜோன்சன் ஹூஸ்டனில் ஆஸ்பத்திரியொன்றில் இம்மாதம் 18-ம் திகதி காலமானர்.

24 வயதான இப்பெண்மணியின் உயரம் ... அங்குலமாகும் ... அமெரிக்காவில் லூசியானா பகுதியைச் சேர்ந்தவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருப்பநீர் சீஸன் முடிந்தவுடன்

# பழங்கள் பற்றிய ஆராய்ச்சி நடைபெறும்

— நமது மாவிட்டபுரம் நிருபர் —

மாவிட்டபுரம் சனி

கருப்பநீர் சீசன் முடிந்ததும் கீரிமலை பனை வெல்ல ஆராய்ச்சி நிலையத்தில் பழங்கள் பற்றிய ஆராய்ச்சி ஆரம்பிக்கப்பட விருப்பதாகத் தெரிகிறது.

இலங்கை மூலப் பொருள் விஞ்ஞான ஆராய்ச்சிநிலையத்தினதும், கைத்தொழில் அபிவிருத்திச் சபையினதும் ஆதரவுடன் கீரிமலை குடியேற்றத் திட்டத்தில் நிறுவப்பட்டுள்ள பனை வெல்லை ஆராய்ச்சி நிலையத்தில் தினமும் 25 கலன்கருப்பணியை பெற்று சுமார் 80 ரூத்தல் வெல்லம் உற்பத்தி செய்யப்படுகிறது. விஞ்ஞான உபகரணங்கள் கொண்டு சுண்ணம்புச் சத்தை அகற்ற தூய்மையாக இரசாயன முறையில் வெல்லம் செய்யப்பட்டு பக்கற்றில் அடைத்து ரூத்தல் 2-50 க்கு வாழ். மாவட்டத்தில் உள்ள மக்கள் கடைகளிலும் வாழ். ஐக்கிய சங்கத்திலும் லக்சலாவிலும் விற்பனை செய்யப்படுகிறது விற்பனை கூடினால் விலை குறைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

பனை மரத்தில் இருந்து ஏராளமான கருப்பநீரைப் பெற்று பணம் பொருள்கள் தயாரிக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிலையத்தில் தற்போது கருப்பணியில் இருந்து வெல்லம் தயாரிப்பது பற்றி ஜி சி ஈ (விஞ்ஞான) மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது கிராம முன்னேற்றச் சங்கங்களால் ஊரிய திணைக்களூடாக அனுப்பப்படும் இம் மாணவர்கள் ஒரு வாரத்துக்கு பயிற்சி அளிக்கப்படுகிறார்கள் ஒரு வாரத்துக்கு ஐந்து பேர் வீதம் பயிற்சி அளிக்கப்படுகிறது இப் பயிற்சி முடிந்ததும் இதில் முன்னணி வகிப்பவர்களுக்கு மற்றும் பகுதியில் அமைக்கப்படும் ஆராய்ச்சி நிலையத்தில் வேலை வாய்ப்பு அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கீரிமலைக்கு வரும் ஏராளமான உல்லாசப் பிரயாணிகள் இந்நிலையத்தில் நிகழும் முயற்சிகளை பார்வையிட்டு வெல்லத்தையும் வாங்கிச் செல்கிறார்கள்.

இதுவரை கருப்பநீரைப் பெற்று வெல்லம் தயாரித்து கருப்பநீர் இறக்குபவர்களுக்கு நன்மையளித்தது போல, இனி விவசாயிகளுக்கு நன்மையளிக்கும் பொருட்டுப் புதிய திட்டம் தீட்டப்பட்டுள்ளது. கருப்பநீர் சீசன் ஆடிமாதத்துடன் முடிவடைவதால் பின்பு இங்கு கிடைக்கும் வாழைப்பழம், மாம்பழம், தக்காளிப்பழம் உட்பட மற்றும் பழவகைகளிலும் ஆராய்ச்சி செய்து புதிய பொருட்களை உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது இதுபற்றியும் ஜி சி. ஈ. மாணவர்களுக்கு ஒரு வாரம் பயிற்சியளிக்கப்பட விருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

—

## "சிக்கன மூலம் அரசுக்கு உதவுவோம்"

உடுப்பிட்டி, சனி

இலங்கை இப்பொழுது பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளது இத்தருணத்தில் நாம் சிக்கனமாக வாழ்வதன் மூலமே அரசாங்கத்தின் திட்டங்களுக்கு உதவமுடியுமென வதிரி முற்போக்கு வாலிப முன்னணிக் கூட்டத்தில் பேசுகையில் வடமகுதி ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த டாக்டர் எஸ். மாசிலாமணி குறிப்பிட்டார்

## றிமாண்டில்

ஊர்காவற்றுறை, சனி

ஊரடங்குச் சட்டத்தை மீறியதாகக் கல்வியங்காடு வாசியான ஐயாத்துரை இராசநாயகம் என்பவர் ராணுவப் பொலிசாரால் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் நீதிபதி திரு. கொலின் மெண்டிஸ் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

நீதிபதி எதிரியை இம் மாதம் 27-ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

......

### விண்வெளியில்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

படுத்த முடியுமா? சூரியனிலிருந்தும் இந்நட்சத்திரக் கூட்டங்களிலிருந்தும் விஞ்ஞானத்தின் உதவியைக் கொண்டும் மனிதன் ஒரு காலம் அபாரமான சக்தியைத் தன் தேவைகளுக்குப் பெறமுடியுமென வானசாஸ்திரிகள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

## இன்றைய பலன்

வைகாசி மாதம் 9-ந் திகதி

23- 5- 71

மேடம்: அவசர முடிவினால் அரியசந்தர்ப்பத்தை இழக்க நேரிடலாம். இன்று பூமிப் பிணக்கைத் தவிர்த்துக் கொள்ளவும்.

ரிஷபம்: நிதியில் அபிவிருத்தியுடன் நிம்மதி பிறக்கும் பந்துக்கள் கொண்டாட்டமும் விருந்தும் உண்டு.

மிதுனம்: உடல் நலனும் பாதிக்கப்படலாம் குடும்பத்தில் ஏற்படும் மோதல்கள் விரக்தி மனப்பான்மையை உருவாக்கும்.

கடகம்: வீட்டில் நலன் தரும் சம்பவங்கள் நடைபெறும். தொழில் துறையிலும் வெற்றிவாகை சூடுவீர்கள்.

சிம்மம்: இனத்தவர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். நீண்ட பிரயாணம் குறித்து திட்டமிடப்படலாம் இன்று நல்லநாள்.

கன்னி: சிந்தனையின் தாக்குதல் உங்களைச் சிந்திக்க வைக்கும். குழந்தையொன்றின் உடல்நலம் பாதிக்கப்படலாம்.

துலாம்: இனிமையான சம்பவங்கள் இடம்பெறும் பெரியோர்கள் ஆதரவும் கிடைக்கும். இன்று கன்னியமான தினம்.

விருச்சிகம்: முயற்சியால் முட்டுக்கட்டை தென்படும். நண்பர்கள் தொல்லை சிலருக்கு உடல்நலமும் பாதிக்கப்படக்கூடும்.

தனுசு: புதிய தொழில்களில் மனதை செலுத்துவீர்கள் இடமாற்றம் ஒன்றாகும் மனதை செலுத்துவீர்கள் பிள்ளைகளின்செல்வாக்கு வளரும்.

மகரம்: எதிர்பார்த்தபண வரவுக்கு இடமுண்டு. பூமியால் லாபம் கிடைக்கும் புத்திரவழியாலும் நன்மையுண்டு.

கும்பம்: பலவழிகளிலும் பணம் செலவாகும். நண்பர்ன் சகவாசத்தால் சிக்கல்களில் மாட்டிக்கொள்ள நேரிடும். நடுநிலைமை நன்று.

மீனம்: பெரியவர் ஒருவரின் ஆதரவு கிடைக்கும் தெய்வத்தின் துணையுமுண்டு இலட்சியப் பாதையில் புதிய முன்னேற்றமுண்டு.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

## மானிப்பாய் பட்டினசபை ஆட்சேபம்

மானிப்பாய் சனி

கட்டுடை உபதபால் நிலையம் என்ற பெயரில் கட்டுடையில் புதிதாக நிறுவப்படவிருந்த தபால்நிலையத்திற்கென அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட மான்யத்தைக்கொண்டு சண்டிலிப்பாயில் ஒரு உபதபால் நிலையத்தை நிறுவுவதற்கு தபாலமைச்சு எடுத்துள்ள முடிவை மானிப்பாய் பட்டினசபை ஆட்சேபித்துள்ளது.

சண்டிலிப்பாயில் ஏற்கனவே ஒரு தபால் நிலையம் இருப்பதாகவும் அத்துடன் சண்டிலிப்பாயிலிருந்து அரைமைல் தூரத்திலுள்ள சமிகானையில் இன்னுமொரு தபால் நிலையம் இருப்பதாகவும் எனவே மான்யத்தை கட்டுடையில் ஒரு உபதால் நிலையம் நிறுவுவதில் செலவிடுமாறும் பட்டினசபைத் தலைவர் திரு. சி. முதலியார் அனுப்பிவைத்துள்ள தந்தியில குறிப்பிட்டுள்ளார் இப்பகுதி சனசமூக நிலையங்களும் ஆட்சேபம் தெரிவித்து மகஜர்கள் அனுப்பியுள்ளன.

கிளிநொச்சித் தொகுதியில்

## வடமராட்சி ஆசிரியர்கள் பணியாற்றச் சம்மதம்

உடுப்பிட்டி, சனி

கிளிநொச்சித் தொகுதியில் கடமையாற்ற வடமராட்சி ஆசிரியர்கள் பலர் முன்வந்துள்ளனர். இங்கு கடமையாற்ற ஆசிரியர்கள் முன்வராததால் பல பாடசாலைகள் மூடப்பட்டிருப்பது தெரிந்ததே.

இதுசம்பந்தமாக வடமாநிலக் கல்வியதிபதி திரு. டபிள்யு. டி. சி மஹாதந்தில விடுத்துள்ள வேண்டுகோள் பயனளித்துள்ளது ஸ்ரீலங்கா ஜாதிகசுரு சங்க வடமகுதிக் கிளையினூடாக இவ்வாசிரியர்கள் வடமாநிலக் கல்வியதிபதியிடம் தமது சம்மதத்தைத் தெரிவித்திருந்தனர் இதனைத் தொடர்ந்து பிரஸ்தாப ஆசிரியர்கள் கிளிநொச்சித் தொகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

—

## கரபந்தாட்டம்

அம்பன், ஞாயிறு

இவ்வாண்டு வடமராட்சி வடக்குக் கிழக்கு காரியாதிகாரி பிரிவினரால் நடாத்தப்பெற்ற கரபந்தாட்டப் போட்டியில் அல்வாய் பூனியன் சந்தமுருகேசனார் வெற்றிக் கேடயத்தையும் ஸ்ரீகோபால் வெற்றிக் கேடயத்தையும் பருத்தித்துறை பூனைற்றட் கலாவதி வெற்றிக் கேடயத்தையும் பெற்றுக் கொண்டன

## காலஞ்சென்ற நாஸருக்கு கௌரவம்

பூடாபெஸ்ட், மே 22

இங்கு முடிவுற்ற உலக சமாதான அசெம்பிளி மகாநாட்டில் காலஞ்சென்ற எகிப்திய ஜனாதிபதி அப்துல் நாஸர், ரமன்ட் குயோட் (பிரான்ஸ்) ஜனாதிபதி ஸல்வடோர் அலெண்டி (சிலி), நண்டோர் செமவிடிமன் (ஹங்கேரி) ஆகியோருக்கு "ஜோலியோ கியூரி" பதக்கம் வழங்கப்பட்டது.

உலக சமாதானத்துக்காற்றிய பணிக்கு இவர்கள் கௌரவிக்கப் பட்டனர்.


# தலைவலி, நோவுகளைச் சகித்துக் கொண்டு வீணுகச் சங்கடப்பட வேண்டாம்




## டிஸ்பிரின் உட்கொண்டு அதிதுரித நிவாரணம் பெறுங்கள்

டிஸ்பிரின் அதிதுரித நிவாரணம் தரும்

தலைவலி, நோவுகளுக்கான மருந்துகள் அதிதுரித நிவாரணம் தர வேண்டும். டிஸ்பிரின், கரையக் கூடிய அஸ்பிரின் கொண்டதாகையால் மிக விரைவாகவும் முற்றாகவும் கரைந்து இரத்தோட்டத்திற் சீக்கிரம் செறிகிறது. இரத்தோட்டத்தில் விரைவாகச் செறிவதால் மிக வேகமாக உடம்பிற் செயலாற்றி உங்களுக்கு அதிதுரித நிவாரணம் தருகிறது.

எவ்வித பயமுமின்றி டிஸ்பிரின் உட்கொள்ளலாம்

டிஸ்பிரின் முற்றாகக் கரைவதாகையால், மற்ற மருந்துகள் போல உடம்புக்குப் பாதகமான கரையாத துகள்களை வயிற்றில் விட்டு வைப்பதில்லை. சில புதிய மருந்துகளிற் போல, பாதகமான சேர்பொருள்கள் எதுவும் டிஸ்பிரினிற் கிடையாது. எனவே எவ்வித பயமுமின்றி டிஸ்பிரின் உட்கொள்ளலாம்.

டாக்டர்கள் சிபாரிசு செய்வது டிஸ்பிரின்

உலகமெங்குமுள்ள வைத்திய நிபுணர்கள், அதிதுரிதமான அதிவன்மையான நிவாரணத்துக்கு டிஸ்பிரினைச் சிபாரிசு செய்கிறார்கள். ஏனெனில் அதி சிறந்த வலி நிவாரணிகளில் ஒன்று டிஸ்பிரின் என்பது அவர்களுக்கு அனுபவத்தில் தெரியும்.

தலைவலி, நோவு, சளிசுரம், காய்ச்சல், தடிமல், மாதவிடாய் வலி, வாத நோவுகளிலிருந்து அதிதுரித நிவாரணம் பெற டிஸ்பிரின் பாவியுங்கள்.

- மாத்திரைகளை நீரிற் கரையவிட்டு அல்லது முழுமையாக ஏதாவது பானத்துடன் உட்கொள்ளுங்கள்.
- குழந்தைகளுக்கு: பெட்டியிலுள்ள அளவுப் பிரமாணங்களைப் பாருங்கள்.

P 9498 றெக்கிட் அன்ட் கோல்மன் உற்பத்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய நிர்வாகிகள்

வெள்ளவத்தை, சனி

தயால் சந்திப் போக்குவரத்துத் திணைக்கள இந்து ஊழியர் கழகத்தின் 1971ம் ஆண்டு நிர்வாகசபை உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு மு நடராசா துணைத் தலைவர்கள்: திருவாளர்கள் சி ஆறுமுகம் பொன்னையசிங்கம், சி பாலசிங்கம், அ சண்முகராசா, வி பத்மலிங்கம். பொதுச்செயலாளர்: திரு த அரைராசா துணைச்செயலாளர்கள்: திருவாளர்கள்ச நவரத்தினம், பிரம்மஸ்ரீ குருசாமி ஐயர், இ ஆறுமுகம், பொருளாளர்: திரு மு வேலுப்பிள்ளை துணைப் பொருளாளர்: திரு பொ கனகலிங்கம், கணக்காய்வாளர்கள்: திருவாளர்கள் மு பாலகிருஷ்ணன், க குமாரசாமி, நிர்வாக சபை உறுப்பினர்கள்: திருவாளர்கள்: த சோமசுந்தரம், சி நடராசா, மு மதியாபரணம், எஸ் தியாகராசா, எம் எஸ் நடராசா, ந சிவகுமார், செல்வி க கனகரத்தினம், செல்வி நா சுந்தரம்பிள்ளை, க கதிர்காமத்தம்பி, ஞா சாமித்தம்பி வ நடராசா, என் சிவசுப்பிரமணியம், க ஞானவேல்வரன், அ குணபாலசிங்கம், எஸ் எம் சேதுகாவலர்.

0 0 0

அம்பன், ஞாயிறு

அம்பன் மாதர் முன்னேற்றச் சங்கப் பொதுக் கூட்டம் கிராம அபிவிருத்தி அதிகாரி திரு. ஜே. ஜே. தேவசகாயம் தலைமையில் நடைபெற்ற போது நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர்: திருமதி இ. பாக்கியம், செயலாளர்: க பரமேஸ்வரி, பொருளாளர்: இ. இராசேஸ்வரி. 9 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

......

## விளையாட்டுப் போட்டி

அரியாலை, சனி

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் விளையாட்டுப் போட்டி இம்மாதம் 31-ம் திகதி நடைபெறவுள்ளது. பரமேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் இவ் விளையாட்டுப் போட்டியில் சுமார் 50-க்கு மேற்பட்ட சனசமூக நிலையங்கள் கலந்து கொள்ளும் என எதிர் பார்க்கப்படுகிறது.

......

## இன்று

யாழ்ப்பாணம், ஞாயிறு

இன்று தென்மராட்சி காரியாதிகாரி காரியாலயத்தில் விசுவமடுத்திட்டக் காணிக் கச்சேரி நடைபெறும்.

படித்த இளைஞர்கள் சுமார் 1000 பேர் இத்திட்டத்தில் காணிபெற விண்ணப்பம் செய்துள்ளார்கள்.

தோட்டம், கமம் செய்து அனுபவமுள்ள குடும்பத்திலுள்ள இளைஞர்கள், நவீன கல்வியறிவுப் பயிற்சிபெற்றவர்கள், விவசாயத்தைக் கஷ்டப்பட்டுச் செய்யக் கூடிய வாலிபர்களே தெரிவுசெய்யப்படவுள்ளார்கள் என்று காணி அதிகாரி தெரிவித்தார். (கு. வி. ம.)

......

## 22-வது பூர்த்திவிழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

மேற்றிராணியராக அபிஷேகம்செய்யப்பட்ட 22வது ஆண்டு பூர்த்தி விழாவை யாழ். மேற்றிராணியார் வண. எமிலியானுஸ்பிள்ளை மிகவும் அமைதியான முறையிற்கொண்டாடினார். இதனை முன்னிட்டு யாழ்ப்பாண கொஞ்சேஞ்சி மாதா கோவிலில் விசேடபாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டது.

## நவோத்தர சகஸ்ர சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கடந்த வாரம் புங்குடுதீவு வல்லன் - திருப்பெருந்துறை ஸ்ரீநாகதம்பிரான் தேவஸ்தான நவோத்தர சகஸ்ர சங்காபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. அன்று விசேஷ கூட்டுப்பிரார்த்தனையும், இன்னிசை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

—

திவுப்பகுதியில்

## பல இடங்களுக்கு மின்சார விஸ்தரிப்பு

குருநகர், சனி

தீவுப்பகுதிக்கான மின்சார விநியோகம் மேலும் விஸ்தரிக்கப்படவிருக்கின்றது. இதுகாலவரை மின்சக்தியின்றி பலதுறைகளில் முன்னேற்றம்காண முடியாதிருந்துவந்த இப்பகுதியைத் தொழிற்துறை முன்னேற்றம்காணக்கூடிய நிலையை இன்று அடைந்துள்ளது.

முன்னாள் தீவுப்பகுதி எம். பி. நவரத்தினத்தின் நீண்டநாள் முயற்சியின் பயனாக கடந்த அரசாங்கத்தால் இரண்டு லட்சம் ரூபா செலவில் உருவாக்கப்பட்ட இத்திட்டம், இன்று பூர்த்தியாகிவருகின்றது. ஊர்காவற்றுறையிலிருந்து புளியங்கூடல், வேலணை ஊடாக புங்குடுதீவுவரை மின்விநியோகத்தை விஸ்தரிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

—

## சோவியத் - கனடா உறவுகள்

மாஸ்கோ, மே 22

'கனடாவும் சோவியத் யூனியனும் உலகில் மிகப்பெரிய ஆர்க்டிக் வல்லரசுகளாகும். பொதுவான பிரச்சினைகளும் பொறுப்புகளும் கடமைகளும் எம்மை எதிர்நோக்குகின்றன'.

இப்படி கூறினார் கனடா பிரதமர் ட்ரூடோ இங்கு நடந்த விருந்து வைபவமொன்றில்.

கனடா பிரதமருடன் அவருடைய துணைவியாரும் வந்திருந்தார்.

கடந்த சில ஆண்டுகாலத்தில் இரு நாடுகளுக்குமிடையில் பல பயனுள்ள தொடர்புகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன என்று மகிழ்ச்சியுடன் திரு. ட்ரூடோ தெரிவித்தார்.

இவ்வைபவத்துக்கு முன்னர் இரு நாட்டுப் பிரதமர்களும் பேச்சுவார்த்தை நடத்தியபோது சர்வதேச பிரச்சினைகள், அரசியல் பொருளாதார விஞ்ஞான ஒத்துழைப்பை விஸ்தரிப்பது முதலியன குறித்து ஆலோசித்தனர்.

விருந்து வைபவத்தில் சோவியத் தரப்பில் பிரதமர் கொஸிஜின் திமித்ரி பொலியான்ஸ்கி, யோரிஸ் பொனொமரேவ் முதலானோர் கலந்துகொண்டனர்.

......

## மீனவர்குடியேற்ற திட்டம்

குருநகர், சனி

மண்டைதீவு கிழக்கு பனைபடிக்காட்டுப்பகுதியில் கரையோரமாக இருக்கும் அரசாங்கத்துக்குச்சொந்தமான காணிகளில், மீன்பிடி இலாகாவின் உதவியுடன் இக்கிராமத்தைச் சேர்ந்த மீனவர்களுக்கான குடியேற்றத்திட்டமொன்றை ஏற்படுத்துவதற்குதீவுப் பகுதிக் காரியாதிகாரி சிவசிதம்பரம் மண்டைதீவுக் கிராம சேவையாளர் திரு. எஸ். கனகலிங்கம் நடவடிக்கை எடுத்துவருகின்றார். இக்காணிக் கச்சேரியை நடத்துவதற்கான ஏற்பாடுகள் அடுத்தமாதம் தொடங்கவிருக்கின்றது.

வடபகுதி அசைஸ் விசாரணை:

# "நாகலிங்கம் வீட்டிற்கு நான் செல்லவில்லை"

## இன்ஸ்பெக்டர் சாட்சியம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

காயமடைந்த கொண்டுவரப்பட்டவர்களில் நாகலிங்கமும் ஒருவர். சம்பவம் நடந்த இடத்திற்கு நான் சென்றபோது நாகலிங்கம் வீட்டிற்கு செல்லவில்லை. நாகலிங்கம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டவர்களில் ஒருவராவர்

பருத்தித்துறை கொலை வழக்கு விசாரணையின் போது எதிரிகள் சார்பில் ஆஜரான அட்வகேட் சி கமலநாதன் குறுக்குவிசாரணை செய்கையில் இன்ஸ்பெக்டர் சிறிவர்த்தனா நேற்று மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் வின்சன் தாமோதரம் முன்னிலையில் ஒன்பதாவது தினமாக விசாரணை செய்யப்பட்டது.

இன்ஸ்பெக்டர் சிறிவர்த்தனா குறுக்குவிசாரணையின் போது மேலும் கூறியதாவது சம்பவம் நடந்த இடத்தில் மாஜிஸ்திரேட் விசாரணை செய்த போது அழகையா. ரத்தினம் தவராசா ஆகியோர் வாக்குமூலமளித்தனர். படம் வரையவர் சம்பவம் நடந்த இடத்திற்குவந்த போது நான் சில இடங்களைச் சுட்டிக் காட்டினேன். மற்றும் சாட்சிகளும் அவருக்கு இடங்களை சுட்டிக் காட்டினார்கள். சம்பவம் நடந்த இடத்திற்கருகில் சிமிதரன் வீடு இருக்கிறது. அங்கு நான் சென்ற சமயம் எவரும் இருக்கவில்லை. புலேந்திரன் 18-ம் திகதி ஆஸ்பத்திரியில் வாக்குமூலமளித்தார்.

எதிரிகள் சார்பில் ஆஜரான அட்வகேட் ஜே. ஈ. பி. செரிபிம் இன்ஸ்பெக்டர் சிறிவர்த்தனாவை குறுக்கு விசாரணை செய்தார்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

## சிமெந்து போதியளவு கிடைக்கும்

கோட்டை, வெள்ளி

இம்மாதம் 4 லட்சத்துக்கும் மேலான சிமெந்து பக்கெட்டுகளை சிமெந்துக் கூட்டுத்தாபனம் தனது வர்த்தகர்களுக்கு விநியோகித்துள்ளதாக கூட்டுஸ்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்போது புத்தளத்திலும் சிமெந்து உற்பத்தி ஆரம்பிக்கப் பட்டுள்ளதாகவும் இதனுல் அடுத்த மாதத்தில் பாவனையாளர்களுக்கு சிமெந்து போதியளவு கிடைக்கும் எனவும் மேற்படி அதிகாரி தெரிவித்தார்.

......

## வருடமாகியும் முடிவில்லையாம்

வெள்ளவத்தை சனி.

1970-ம் ஆண்டு மார்ச் மாதம் இலங்கை சுங்கசேவை உத்தியோகத்தர் பதவிகளுக்காகச் சுங்க இலாகாவினுல் நடாத்தப்பட்ட பரீட்சை முடிவுகள் இன்று வரையில் வெளியாகவில்லையென்று இப் பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகள் விசனம் தெரிவித்துள்ளனர். ரூபா 25 முத்திரை ஒட்டிக் கஷ்டப்பட்டுப் பரீட்சை எழுதியும் சுங்க இலாகாவினர் இன்னும் பராமுகமாக இருப்பதாகப் பரீட்சார்த்தி ஒருவர் கவலை தெரிவித்தார்.

—

## நல்லூர் ஸ்ரீ. ல. சு. க. கிளை பாராட்டு

அரியாலை சனி

சட்டபூர்வமாக அமைக்கப்பட்ட மக்கள் அரசாங்கத்தை வன்செயல்களினுல் கவிழ்த்து நாட்டைப் பிடிக்க நாட்டிலுள்ள சில வகுப்புவாத பிற்போக்கு பயங்கரவாதிகள் எடுத்த முயற்சியை மக்கள் அரசு முறியடித்தமைக்கு எமது பாராட்டுகளை தெரிவிக்கிறோம். என்று நல்லூர் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கிளை பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு அனுப்பிய பாராட்டுக் கடிதத்தில் கூறியுள்ளது.

......

## மைதானமின்றி கஷ்டம்

உடுப்பிட்டி, சனி

உடுப்பிட்டித் தொகுதியில் பொதுவிளையாட்டு மைதானமொன்றில்லாததால் இப்பகுதி விளையாட்டுக்கழகங்களும், வாலிபர்களும் கஷ்டமுற்று வருகின்றனர். இதனைத்தொடர்ந்து விளையாட்டரங்கொன்று நிறுவப்படவேண்டிய அவசியம்பற்றி இக்கழகங்கள் வலியுறுத்துகின்றன.

# "புத்தரின் லட்சியங்களை பாழாக்கி விடக்கூடாது"

வெள்ளவத்தை, சனி

"அன்பும் அறமும் தழைத்து ஓங்கி வளர்ந்த எமது நாட்டில் அராஜகத்திற்கும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கும் இடமளிக்கக்கூடாது. புத்தர்பிரான் மேற்கொண்ட அஹிம்சை, அன்பு, காருண்யம் முதலிய இலட்சியங்களை நம் பாழாக்கிவிடக்கூடாது" என்று வெள்ளவத்தை லலித கலாநிலையத்தில் நடைபெற்ற பௌர்ணமி தினச் சொற்பொழிவின்போது மேற்படி நிலைய அதிபர் திரு. டி. ஏ குணசேகரா குறிப்பிட்டார்.

"மாணவர்களின் நல்லொழுக்கத்தில் பெற்றோர்களும் ஆசிரியர்களும் மூக்கிய பங்கெடுக்கவேண்டும். நல்ல முறையில் பேணி வளர்க்கப்படாத பிள்ளையும் தகுந்தபடி கல்வி போதனை செய்யாத பிள்ளையும் கெட்டுச் சீரழிவதில் ஆச்சரியமொன்றும் இல்லை. இந்த நாட்டில் ஒற்றுமையும், அன்பும், அறமும் தழைக்க எல்லோரும் பாடுபடவேண்டும்" என்று அவர் மேலும் கூறினார்.

......

## தீர்மானம்

அரியாலை சனி

அரியாலைப் பகுதிக்கு ஒரு பொலிஸ் நிலையம் நிறுவித்தருமாறு அரசாங்கத்தைக் கோரும் தீர்மானத்தை அரியாலை வாலிபர் சங்கம் நிறைவேற்றியுள்ளது.

......

## உத்தியோகப்பற்றற்ற அதிகாரி

மானிப்பாய், சனி

துன்னாலை வடக்கைச் சேர்ந்த திரு. நா தர்மலிங்கம் பருத்தித்துறைத் தொகுதியில் உள்ள கூட்டுறவு மொத்த விற்பனை இலாகாவினுலும், லங்கா சதொசா நிறுவனத்தினுலும் நிர்வகிக்கப்படும் சகல ஸ்தாபனங்களுக்கும்கடைகளுக்கும் உத்தியோகப்பற்றற்றமேல்பார்வை அதிகாரியாக உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சரினுல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் சிறுபான்மைத்தமிழர் மகாசபை பொதுச்சபை உறுப்பினரும் துன்னாலை கிராம முன்னேற்றச் சங்கத் தலைவரும், கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினரும் ஆவார்.

## மக்கள் புகார்

அனலைதீவு, சனி

அனலைதீவிலுள்ள பங்கீட்டரிசி விநியோகஸ்தர்கள், ஒரமமாக பொதுமக்களுக்கு அரிசியை விநியோகிப்பதில்லை என புகார் கூறப்படுகிறது இவ்வாரத்துக்குரிய பங்கீட்டரிசி குறிப்பிட்ட நாளில் ஊர்காவற்றுறையிலிருந்து கொண்டுவரப்படாததால், இப்பகுதி பல ஏழைமக்கள் மிகவும் அவதியுற்றனர். இது சம்பந்தமாக பொதுமக்கள் பஸி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரிக்கு மகஜர் மூலம் புகார் செய்துள்ளனர்.

—...

## வயோதிபர் தற்கொலை

ஊர்காவற்றுறை, சனி

கரம்பொன் மேற்கு வாசியான இ ஐயம்பிள்ளை (வயது 77) என்ற வயோதிபர் கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

வாழ்க்கையில் வெறுப்புற்று மனமுடைந்து இருந்தார் என இவரது மரண விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

விசாரணையின் பின் மரண விசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

......

## அமைப்புக் குழு

வேலணை, சனி

வேலணை கலைமகள் இளைஞர் விவசாயக்கழகம்நடத்தவிருக்கும் வனம்பொருள் கண்காட்சி சம்பந்தமாக அமைப்புக் குழுவொன்று தெரிவுசெய்யப்பட்டது.

தலைவர்: திரு. வி. எஸ். கனகரத்தினம், ஆலோசகர் திரு. வி. ஐயாத்துரை. செயலாளர்: திரு. ச. அம்பிகாபதி மற்றும் நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

......

## சேக்கிழார் குருபூசை

யாழ்ப்பாணம், ஞாயிறு

இம்மாதம் 29-ந் திகதி சனிக்கிழமை அகில இலங்கை சேக்கிழார் மன்றத்தாரால் யாழ் இந்துக் கல்லூரிப் பிரார்த்தனை மண்டபத்தில் சேக்கிழார் குருபூசை நடாத்தப்படவிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

ஜீவர்களை மனம் நோகப் பேசாமலிருத்தலும், பேரன்போடுகூடிய உண்மை மொழிகளைக் கூறுதலும், வேதாகமங்களை ஓதுதலும் வாக்கினுல் செய்யத் தகுந்த தவமாகும்.

—கீதை-

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

திருவள்ளுவர் ஆண்டு விரோதிகிருது வருஷம் வைகாசிமாதம் 9-ந் திகதி (23-5-71)

# தொழிலாளர் பாதுகாப்பு

தொழிலாளர் நலனுக்காக முற்போக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதில்தான் திறமையான இலாபகரமான தொழில் நிர்வாகம் பெரிதும் தங்கியிருக்கிறது. சமீபத்தில் மைசூர் மாநில கவர்னர் தனியார் துறைத் தொழில் அதிபர்களின் மகாநாடொன்றில் பேசுகையில் நிர்வாகத்தில் தொழிலாளரும் அதிக பங்குகொள்ளச் செய்வதன்மூலம் தொழிற் தகராறுகளை வெகுவாகக் குறைக்க முடியுமென்று கருத்துத் தெரிவித்திருந்தார். இந்தக் கருத்து இந்தியாவில் மட்டுமல்ல நமது நாட்டிலும் இப்போது வலுப்பெற்றுவருகிறது.

ஜனநாயகம் என்பதன் உண்மையான அர்த்தம் வாழ்க்கையின் அடித்தளத்திலுள்ள மக்களுக்கும் அதிகாரம் பங்கிடப்பட வேண்டுமென்பதாகும். ஒரு தொழில் ஸ்தாபனத்தின் நிர்வாகத்தில் அதன் தொழிலாளருக்கும் சிறிது பங்கிருக்கவேண்டுமென்பதும் இதன் அர்த்தம்தான். நாட்டின் சரித்திரமே அறியாதபடி இன்று பெரும் நெருக்கடி சூழ்ந்தபோது தொழிலாளரும் தொழிற்சங்கங்களும் ஒரேகுரலில் அரசாங்கத்துக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் அளித்து நாட்டைப் பேராபத்தினின்றும் காப்பாற்றுவதற்கு செய்த உதவி சாதாரணமான விஷயமல்ல. எனவே, நிர்வாகத்தில் தொழிலாளருக்கும் பங்கு என்ற கருத்து வெறும் பேச்சுக்குரிய விஷயமல்லவென்பதையும் கருத்தில் கொள்ளவேண்டும். தொழிலாளரின் முன்னேற்றம், நலன், திருப்திகரமான ஊதியம், மற்றும் போதிய சன்மானம் ஆகியவற்றைச் செயலில் வழங்குவதற்குத் தேவையான சட்டங்களை மற்றும் நடவடிக்கைகளையும் அரசாங்கம் செய்யும் என்ற தொழிலாளரின் நம்பிக்கையையே அவர்கள் இந்த நெருக்கடியான கட்டத்தில் அளித்த ஆதரவும் ஒத்துழைப்பும் காட்டுகிறது.

எனவே தனியார் துறை நிறுவனங்கள் எதுவும் தாம் நினைத்தபடி எவரையும் எந்தநேரத்திலும் வேலைநீக்கம் செய்யமுடியாதபடி தடுத்துத் தொழிலாளருக்குப் பாதுகாப்பளிக்கும் புதிய மசோதாவை அரசாங்கம் கொண்டுவந்திருப்பது ஆச்சரியமளிக்கக் கூடியதல்ல.

சேவைப் பாதுகாப்பு, திருப்திகரமான வேதனம் நியாயமான வேலைநேரம் ஓய்வு, விடுமுறை ஆகியவைகளே தொழிலாளரின் அடிப்படைத் தேவைகளாகும். சோஷலிஸ அரசாங்கத்தின் கீழானாலும் சரி முதலாளித்துவ ஆட்சி அமைப்பின் கீழானாலும் வேறு எந்த ஆட்சி அமைப்பின்கீழும் தொழிலாளரின் அடிப்படைத் தேவைகள் இவைதாம். இன்றைய அரசாங்கம் சோஷலிஸத்துக்குத் தன்னை அர்ப்பணித்திருக்கிறது. எனவே வெறுமனே சேவைப்பாதுகாப்புக்கு உத்தரவாதமளிப்பதுடனில்லாது தொழிலாளர் சமூகத்தின் நலனை நிரந்தரமாகப் பாதுகாப்பதற்கான வழிகளை மிகத்துரிதமாகவும் தீவிரமாகவும் மேற்கொள்ள வேண்டியது அதன் கடமையாகும்.

விவசாயம், கைத்தொழில் துறையின் உறுதியான துரிதமான முன்னேற்றத்தில்தான் நாட்டின் பொருளாதாரம் பெரிதும் தங்கியிருக்கிறது. அரசாங்கத்தின் கட்டுப்பாடு எந்த அளவுக்கு இருந்தபோதிலும் நாட்டின் பொருளாதாரத்தில் தனியார் துறையினருக்கு கணிசமான அளவு பங்குஇருக்கிறது. ஆனால் தனியார்துறையைப்பீடித்துள்ள வியாதிகளில் முக்கியமானது தொழில்தகராறு என்னும் நோயாகும். இந்த வியாதியின் தீமையை தனியார் துறைநிர்வாகமும் தொழிலாளரும் சரிவர உணர்ந்து தகுந்தபரிகாரம் கண்டால் இருதரப்பினரும் சந்தோஷமும் சந்துஷ்டியும் பெறுவர்.

நமது நாட்டில் துரதிஷ்டவசமாக ஒரு தொழிலுக்குப் பல சங்கங்கள் இருப்பதும், போட்டித் தொழிற்சங்கங்கள் காரணமாக தொழிலாளர் மட்டுமன்றி தொழிலே பாதிக்கப்படுவதும் அரசியல் கட்சிகளின் கட்டுப்பாட்டின்கீழ் அவர்களுடைய விருப்புவெறுப்புகளுக்கேற்ற தொழிற்சங்கங்கள் இயங்குவதும் நம் நாட்டின் ஒருகேடென்றே சொல்லவேண்டும்.

நம்நாட்டில் தொழில் துறைகள் முன்னைய நிலையிலிருந்து முற்றிலும் மாறுபட்டுள்ள போதிலும் தொழிற்சங்க நடவடிக்கைகள் முன்னைய பழைய நடைமுறைகளையேபின்பற்றி வருகின்றன. அற்ப விஷயங்களுக்கும் 'வேலைநிறுத்தம்' என்ற ஆயுதத்தை அவை ஏந்துகின்றன. தங்கள் குறிக்கோளை அவை சரியா. தவறு என்பதைப்பற்றித் தொழிலாளருக்குச்சிலசமயம் தெரியாமல்கூடஇருக்கலாம். அவைகளுடைய தொழிற்சங்கங்கள் கூட்டணி அமைத்துப் போராட்டம் நடத்துவதையும் வேறு யாருக்கெதிரான போராட்டம் தொழிலாளரைத் திருப்தியாக நடத்தும் நிறுவனத்தில் கூட விரிவடைந்து பாதிக்கப்படுவதும் உண்டு.

தொழிலில் அமைதியும் தொழிலாளரின் திருப்தியும் எவ்வளவுக்கு அவசியமோ அந்த அளவுக்கு தொழிலாளரையும் தொழிலையும் நன்கு தெரிந்தவர்கள் நிர்வாகத்திலிருக்க வேண்டும். தொழில்மட்டுமல்ல...

தன்னுடையது என்று கருதாமல் ஸ்தாபனத்தின் நலனிலும் அக்கறை கொண்டு உழைக்கும் மனப்பான்மை தொழிலாளருக்கும் வேண்டும். தொழிலாளரும் நிர்வாகமும் ஒன்று சேர்ந்து ஒத்துழைத்தால்தான் உற்பத்தியும் பெருகும், நாடும் முன்னேறும். இருதரப்பினரும் திருப்தியுடன் வாழவும் முடியும். இது சட்டத்தினுல் மட்டும் நிறைவேற்றக் கூடிய விஷயமல்ல. மக்களின் மனமும் பொறுத்து...

## யாழ். மாநகர சபைக் கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற பொதுக் கூட்டம் இம்மாதம் 31-ம் திகதி காலை 10 மணிக்கு மேயர் திரு. அல்பிரட் துரையப்பா தலைமையில் நடைபெறும்.

## நேர்முகப் பரீட்சை

அம்பன், ஞாயிறு

கிராம சேவையாளருக்கு விண்ணப்பஞ் செய்தோர்களுக்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் 25-ம் திகதி தொடக்கம் யாழ்ப்பாணம் அரசாங்க செயலகத்தில் நடைபெறவிருக்கின்றது.

அரியாலை

## நெசவாளர் கஷ்டம்

அரியாலை, சனி

நெசவுநூல் தட்டுப்பாடு காரணமாக அரியாலைப் பகுதியில் உள்ள சுமார் 300-க்கு மேற்பட்ட நெசவாளர் மிகவும் கஷ்டம் அடைகின்றனர். இதுவிடயத்தில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்ற தீர்மானம் அரியாலை வாலிபர் நெசவுத் தொழிலாளர் மன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

## பாதுகாப்புப் படையினர் வெளியேறுவர்

கொழும்பு, சனி

ஜூன் மாதம் 2-ந் திகதி சகல பாடசாலைகளும் திறக்கப்படவிருப்பதால் நாடு பூராவுமுள்ள பதினறு பாடசாலைகளிலுள்ள பாதுகாப்புப் படையினர் அங்கிருந்து வேறிடங்களுக்குச் செல்ல வேண்டிய ஒழுங்குகளை அரசாங்கம்செய்து வருகிறது.

## சாரதி லைசென்ஸ் யாருடையது?

தாவடிகுழி ஸ்தாபிப்பு நிலையத்துக்கு அண்மையில் மானிப்பாயைச் சேர்ந்த ஆறுமுகம் யோகராசா என்பவரின் சாரதி லைசென்ஸ் யாழ் கல்வி அலுவலகத்தைச் சேர்ந்த திரு கந்தசாமி என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் காரியாலய நேரத்தில் வந்து அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

## ஆசிரியர்களின் மேமாதச்சம்பளம்

கொழும்பு, சனி

ஆசிரியர்கள் மே மாதச் சம்பளம் பெறுவதற்காக பிரதேசக் கல்விக் காரியாலயங்களுக்குச் செல்ல வேண்டியதில்லை. இவர்களின் சம்பளம் வழமைபோல் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

# ஜீ. ஜீ. நாடுதிரும்பியதும் பொதுச்சபை கூட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

தமிழ் காங்கிரஸ்தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் இம்மாத இறுதியில் நாடு திரும்புவார் என்றும் அதன்பின்னரே பொதுச்சபைக் கூட்டம் நடைபெறுமென்றும், தமிழ்க்காங்கிரஸ் செயற்குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

அமெரிக்கா சென்றிருந்த திரு. பொன்னம்பலம் மீண்டும், அங்கிருந்து மலேசியா சென்றுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழ் காங்கிரஸ் ஆட்சி மன்றக் குழு, நான்காவது கட்சியாக அரசாங்கத்தில் சேர்ந்ததுபற்றி பொதுச்சபை பரிசிலனை செய்யுமென்றும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தில் சேர்ந்தது பற்றி தமிழ் காங்கிரஸ் எம். பி.க்கள் மூவரும் விளக்கம் தெரிவிப்பார்கள் என்றும் தமிழ்க் காங்கிரஸின் பெரும்பாலானேர் தமது முடிவை ஏற்றுள்ளனரென்றும் வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. தியாகராசா தெரிவித்தார்.

தற்பொழுதுள்ள நிலைமை காரணமாக பொதுச்சபைக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும், விரைவில் பொதுச்சபை கூட்டப்படுமென்றும், தமிழ் காங்கிரஸ் நிர்வாகச் செயலாளர் திரு. வி. சங்கரப்பிள்ளை தெரிவித்தார்.

# வடமாநிலக் கல்லூரி அதிபர்கள் 3 நாள் மாநாடு

யாழ்ப்பாணம், ஞாயிறு

இம்மாதம் 26-ம் திகதி முதல் 28-ம் திகதிவரை வடமாநிலக் கல்லூரி அதிபர்கள் மாநாடு ஒன்று யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. வடமாநிலக்கல்வி அதிபதி திரு. டபிள்யூ. சி. மகாதந்திலை கட்டும் இம் மகாநாட்டை கல்வி அமைச்சின் மேலதிக நிரந்தரச்செயலாளர் கலாநிதி சுமதிபாலா தொடக்கி வைப்பார். நிதி, நிர்வாகம், பொதுநிர்வாகம், பாடசாலை நிர்வாகம் முதலான பல விஷயங்களைப் பற்றியும் உயர் அதிகாரிகள் விரிவுரைகள் நிகழ்த்துவார்கள் என அறியப்படுகிறது.

# மேலும் பல பயங்கரவாதிகள் சரணடைந்தனர்

கோட்டை, சனி

நாட்டின் பாதுகாப்புப் படையினர் பலஇடங்களில் திடீர் பரிசோதனைகள் நடத்தினர் கேகாலையில் பலதுப்பாக்கிகளும் 50 டைனமைற்களும் 40 கைக்குண்டுகளும் கண்டு பிடிக்கப்பட்டன. நேற்றுமட்டும் 61 கிளர்ச்சிக்காரர்கள் சரணடைந்தனர். குருநாகல், இரத்தினபுரி, மாத்தறை, கண்டி, கேகாலை, மொறட்டுவை ஆகிய இடங்களில் பல பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர்.

நேற்று மட்டும் 67 பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டனர். இதில் பெரும்பாலானவர்கள் மொறட்டுவையில் கைதுசெய்யப்பட்டனர். இங்கு 21 பேரும், கேகாலையில் 17 பேரும், குருணைலையில் 9 பேரும், அனுராதபுரத்தில் 9 பேரும் மாத்தளையில் 6 பேரும் கைது செய்யப்பட்டனர்.

குருணைலயில் ஒரு பகுதியில் 10 ஆயிரம்ருபா பெறுமதியான உணவுப் பொருட்களும் உடைகளும் கண்டு பிடிக்கப்பட்டன. இவை பயங்கரவாதிகளினுல் சில நாட்களுக்குமுன் கொள்ளையடிக்கப்பட்டவை எனதெரிவிக்கப்பட்டது குருணைலைப் பகுதியிலுள்ள நெலசிபுரத்தில் நிலைமைசீரடைந்துவருவதாக தெரிவிக்கப்பட்டது இப்பகுதி பயங்கரவாதிகளின் சிறிய கோட்டையாக இருந்ததெனச் சொல்லப்படுகிறது.

நாட்டின...

1-ம் பக்கத் தொடர்ச்சி

கள் கஷ்டங்களுக்கு அப்பால் நின்று ஆராய வேண்டும். இந்த நிலைமைகளினுல் எதிர்கால சந்ததியினர் பாதிக்க அனுமதிக்க முடியாது. எனவே இந்த விஷயத்திற்கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்என்றுதெரிவித்தார்.

இதற்கு முன்பாக பண்டாரகம முன்னாள் எம். பி. திரு ஜோர்ஜ் கொத்தலாவல காலமானதற்கு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# "ஒரு மொழி, நல்லெண்ணத்தின் அடிப்படையில் வளரவேண்டும்"

— கவர்னர் உஜ்ஜல்சிங்

சென்னை, மே. 22

ஆங்கிலம் இந்தியாவின் ஆட்சி மொழியாகத் தொடர்ந்து நீடிக்க வேண்டும்' எனத் தமிழ்நாடு கவர்னர் உஜ்ஜல்சிங் தெரிவித்துள்ளார்.

கவர்னர் பதவியில் இருந்து ஓய்வுபெறும் திரு. உஜ்ஜல்சிங் பத்திரிகை நிருபர்களுக்களித்தபேட்டியிலேயே மேற்கண்டவாறு கூறினர்.

அவர் இப் பேட்டியில் மேலும் தொடர்ந்து கூறியதாவது: 'தமிழ் நாட்டில் இந்தி மொழிக்கு எதிர்ப்பு இந்தி வெறியர்களின் காரணமாகவே ஏற்பட்டது. தென் இந்தியர்களுக்கு இந்தி மொழியை வெறுக்க வேண்டும் என்ற எண்ணம்கிடையாது. நல்லெண்ணத்தின் அடிப்படையில் தான் ஒரு மொழி வளரவேண்டும். இந்தமொழி விவகாரத்தை மறந்து விட்டு ஆங்கிலத்தை தொடர்ந்து ஆட்சிமொழியாக நீடிக்க வேண்டும்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் அச்சகத்தாரால் யாழ்ப்பாணம் இல. 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு மே மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## நிர்வாகத்தை பொறுப்பேற்றார்

கோட்டை, சனி

களுத்துறை நகரசபை நிர்வாகப் பொறுப்பை களுத்துறை பிராந்திய உதவி உள்ளூராட்சி கமிஷனர் நேற்று பொறுப்பேற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org